
# ஈழம்




**நாம் ஈழவர் நமது மொழி தமிழ் நம் நாடு ஈழம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு பிரகடனம்

ஈழத்தின் இறுதிப்பங்காளி
பசியை மறந்து படிக்கும் வரை
வியர்வை மட்டுமல்ல விளைநிலமும் உனக்குத்தான்-என்ற
பிரகடனங்கள் எல்லையிலும் உரைக்கும் வரைக்கும்
பாதி இதயமல்ல பங்காளியே நீதான்.-இது
எங்கள் பண்பாடு என முழங்கும் வரைக்கும்
ஈழவர் கரங்கள் ஓயாது—
ஈரோஸின் கருவிகள் வீழாது.
நாளை எங்கள் கரங்கள் உயரும்
உலகின் நரம்பு மீண்டும் அதிரும்
செங் கொடிகள் முகிலை விஞ்சும்-அன்றே
மானிடம் நெஞ்சை நிமிர்த்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம்

மலர் 1 — இதழ் 4 15—2—84 — அன்பளிப்பு: ரூபா 2

அட்டை ஓவியம்
நேரு

தொடர்புக்கு

க. பாலன்
10, கங்காராம்தோட்டம்
சென்னை-24

## எதிரொலி

"ஈழம்" என்பதன் இறைமை—வடக்கு கிழக்கு மக்களை, மட்டும் உள்ளடக்கியதல்ல. இவர்களுடன் கூடவே மலையக மக்களை உள்ளடக்கியதாய் அமைதல் வேண்டும். இதனையே எமதுஇயக்கம் 1975 ஆம் ஆண்டிலிருந்து தன் கருத்தாக முன்வைத்தது-வலியுறுத்தியது. இதனடிப்படையிலேயே தன் செயற்பாட்டுத் திட்டமாயும் முன்னெடுத்தது. அன்று எம் கருத்தை மறுத்தவர்கள் - எள்ளி நகையாடியவர்கள் இன்று அதன் அவசியத்தை உணரத் தொடங்கியுள்ளனர்.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சனையை வெறும் மொழிப் பிரச்சனையாகவும், இனவெறிப்பிரச்சனையாகவும் மட்டுமே நீண்டகாலமாக நோக்கியவர்கள் அதனடிப் படையிலேயே தம் அரசியல் கோரிக்கையையும் வடிவமைத்தனர். இதனாலேயே தங்கள் தலைமையும், பதவியும், நலன்களும் பாதுகாக்கப்படுமெனக் கருதினர். ஆனால் ஈழப்பிரச்சினை சர்வதேச முக்கியத்துவத்தை அடையத் தொடங்கிய போதுதான்-அதன் தீர்விற்கு இனவெறிக் கோரிக்கைகள் கைகொடுக்காது என்பதனைப் போராடும் இயக்கங்கள் புரியத் தொடங்கின. ஜனநாயகத் தலைமையைப் புறக்கணிக்கத் தொடங்கினர்.

ஆதலால் தவிர்க்க முடியாமல் போராடும் இயக்கங்களும்-இன்று மலையக மக்களுக்கான தீர்வையும் உள்ளடக்கிய, அரசியல் கொள்கையை முன்வைக்கத் தொடங்கியுள்ளனர். ஆனால் அதற்கு தத்தம் அரசியல் எண்ணப்பாட்டிற்கு ஏற்ப பல தீர்வுகளை முன்வைக்கின்றனர். அதே வேளையில் மலையக மக்களின் தொழிற்சங்க தலைமையை அளிந்தவர்களும் தம் கருத்துக்களை வழிமுறைகளை மாற்றிக் கொள்ள தொடங்கியுள்ளனர். சிலர் மலையக மக்களை வடக்குக் கிழக்கு எல்லைப் புறங்களில் குடியேற்றலாம் என்கின்றனர். இன்னும் சிலர் மலையக மக்கள் தனித்தேசிய இனம் என்கின்றபுரட்டல் வாதத்தை முன் வைக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இவர்கள் இன்னும் மலையக மக்களையும் அவர்களின் அவசியத்தை உணரத் தவறியுள்ளனர் எங்கே அவர்கள் அரசியல் போராட்டத்தில் பங்கெடுத்தால் முன்னணிக்கு வந்துவிடுவார்களோ எனப் பயப்படுகிறார்கள். ஆனால் வரலாற்று நியதி இவர்கள் எண்ணங்களை மீறி நடக்கத் தொடங்கியுள்ளது

1948 ல் வாக்குரிமை பறிக்கப்பட்ட போது வாய்மூடிக் கிடந்தவர்கள், 1964ல் நாடு கடத்தல் ஒப்பந்தம் செய்யப்பட்ட போது மௌனித்திருந்தவர்கள், டெல்டா டெவன் தோட்டங்கள் எரிக்கப்பட்ட போதும், சிவனு லெட்சுமணன் கொலை செய்யப்பட்ட போதும் ஒரு சொட்டு கண்ணீர் சிந்தாதவர்கள் 1977 ல் அகதிகளாக்கப்பட்ட போது அனுதாபம் தெரிவிக்காதவர்கள், இன்று அவர்கள் மீது பரிவு காட்டிப் பாசம் செய்கின்றார்கள். இதற்கான அவசியம் 1983ன் அவல நிகழ்வுகளின் பின்பே உருவானது. ஏனெனில் இவ் அவல நிகழ்வுகள் ஈழப் பிரச்சனைக்கு சர்வதேச முக்கியத்துவத்தை அளித்ததுடன் சர்வதேசத் தீர்விற்கும் நிர்ப்பந்தித்துள்ளது. இதன் பின்னணியில் தீர்விற்கான வழியமைக்க அண்டைய நாடான இந்தியா முன்னணி வகிக்க வேண்டியதாய் இருக்கிறது ஆதலால் மலையக மக்களின் பிரச்சனையும் முன்னணிக்கு வரவேண்டிய தாய் இருக்கின்றது இந்த அளவிலாகுதல் இவர்கள் எண்ண மாற்றம் வரவேற்கக் கூடியதே ஆனாலும் இவர்கள் ஈழப் போராட்டத்தின் பரிமாணங்களை நன்கு புரிந்து அதன் போராட்ட முறையை வகுத்துக் கொண்டாலன்றி ஈழப் பிரச்சினைக்கு தீர்வு என்பது சாத்தியமாகாது.

ஆதலால் தான் நாம் கோருகின்றோம் ஈழத்திற்கான போராட்டம்வெறும் தேசிய இனப்போராட்டம் மட்டுமல்ல; வர்க்கப் போராட்டத்தையும் இணைத்துக் கொண்டதே. மலையக மக்களுக்கான தீர்வு கிட்டாமல் அடிப்படை மக்களான பாட்டாளிகள், விவசாயிகள், பாமரர்கள் இணையாமல் அவர்கள் எழுச்சி பெறமல் தேசிய இனப் பிரச்சனையை தீர்க்க முடியாது என்பதனை மீண்டும் நாம் வலியுறுத்த வேண்டியவர்களாயுள்ளோம்.

● ● ●

## வடமுனையில் மீண்டும் குடியேற்றம்

பாராளுமன்றத்தில் இன்றைய எதிரணி முதல்வர் திரு. அநுராபண்டாரநாயக்கா பேசும் போது, ''வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழும் இந்திய வம்சாவளியினரை வெளியேற்றும் வரை வடமுனையில் குடியேற்றப்பட்ட சிங்களவர் மீது கைவைக்க வேண்டாம்'' எனக் கூறியுள்ளார்.

1971-1977 இனவாத நிகழ்ச்சிகள் நடந்த பின்னர் டிம்புலாகல சீலாலங்கார என்ற பௌத்தபிக்கு வடமுனையில் சிங்கள காடையர்களை குடியமர்த்த முயன்றுள்ளார். 1983 கலவரத்தின் பின் இப்பிக்குவிற்கு வந்த வீராப்பினுல் மீண்டும் குடியேற்றத்தை ஆரம்பித்துள்ளார். இப்பிக்குவிற்கு வேண்டிய முழு ஆதரவையும் உதவிகளையும் அமைச்சர் காமினி திசநாயகாவும், இன்னுமொரு அமைச்சரும் செய்து வருவதாக அமைச்சர் தேவநாயகம் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

● ● ●

## தோட்டப் பகுதிகளில் தொடரும் வன்முறை

இராகலை பகுதியில் உள்ள 'லிடஸ்டேல்' தோட்டத்தின் உதவித் தோட்டத்துரை குணசேகரா தொழிலாளி தங்கராசாவை தாக்கியதை தொடர்ந்து அத்தோட்டத்தில் 2000 தொழிலாளர் உடனடியாக வேலை நிறுத்தத்தில் குதித்திருந்தனர். இதைப் பொறுக்க முடியாத தோட்டத்துரை போலீசாரையும் சிங்கள வெறியர்களையும் வரவழைத்து தொழிலாளர் மீது மோத விட்டார். நூறுக்கு மேற்பட்ட சிங்களவெறியரும் போலிசாரும் இணைந்து தோட்டத்தை சூழ்ந்து தாக்கத் தொடங்கினர். தொழிலாளர் வசிக்கும் லயன்களில் 120 வதிவிடங்கள் முற்றாக எரிக்கப்பட்டு சாம்பலாகின. பல வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டன. பல தொழிலாளர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சரம்

## பட்டபடிப்பு மாணவர்கள் உண்ணாவிரதம்

சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் பட்டப்படிப்பை மேற்கொண்டுவந்த பல்லாயிரக்கணக்கான மாணவ மாணவிகள் சிங்களவர்களால் பெருமளவு பாதிக்கப்பட்டும் தாக்கப்பட்டும் இருந்தார்கள். இதனால் அச்சமடைந்த இவர்கள் தமது படிப்பை வடக்கு கிழக்கில் மேற்கொள்ள ஆவன செய்யுமாறு ஜெயவர்த்தனா அரசை கோரியிருந்தனர். இதற்கு செவிசாய்ப்பு இல்லாத நிலையில் தைமாத முதல் வாரத்தில் உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்தனர்.

இம்மாணவருக்கு ஆதரவாக யாழ்ப்பாண பகுதியில் உரும்பராய், மட்டுவில், மானிப்பாய், ஆவரங்கால், இணுவில், கொடிகாமம் பகுதி பொதுமக்கள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டித் திருந்தனர். இது கிழக்கு மாகாணத்துக்கும் பரவி மட்டக்களப்பு பகுதியில் கடையடைப்பும், கர்த்தாலும் நடைபெற்றது பஸ் போக்குவரத்தும் சில நாட்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்தப் பரபரப்பான வேளையிலும் உண்ணாவிரதமிருந்தவர்கள் மிகவும் பலவீனமுற்றிருந்த சமயத்திலும் திடீரென அங்கு வாகனங்களில் இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் வந்திறங்கிய ஆறு வாலிபர்கள் உண்ணாவிரதிகளைக் கடத்திச் சென்றனர். கடத்தப்பட்டவர்களில் 4 பேர் பெண்கள், 5 பேர் ஆண்கள் கடத்திச் சென்றவர்கள் தங்களைப் 'புலிகள்' என இனங்காட்டி "காலங்காலமாக தோல்வியுற்ற சாத்வீகப் பாதையில் இல்லாமல் சரியான வெகுசனப் போராட்டத்துக்கு மாற்றி எமது முழுமையான விடுதலைக்கு உழைப்பது அவசியம்" என வலியுறுத்தும் துண்டுப் பிரசுரமொன்றையும் வெளியிட்டிருந்தனர்.

## தனியாரிடம் ஒப்படைக்க எதிர்ப்பு தோட்டப் பகுதிகளில் தொடர் வேலை நிறுத்தம்!!

"தனியார் துறையினரிடம் கையளிக்கப்படும் தோட்டங்களில் வேலை நாட்கள் குறைக்கப்படுகின்றன. சம்பளக் குறைப்பு, ஆட்குறைப்பு போன்ற இன்னோரன்ன கொடுமைகள் இடம் பெறுகின்றன. இதனால் தோட்டங்களை தனியாருக்கு கையளிப்பதை கொள்கையளவில் எதிர்க்கிறோம்" என்ற அடிப்படையில் கபரகலை தோட்ட தொழிலாளர்கள் கடந்த ஒரு மாத காலமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இவ்விவகாரம் தொடர்பாக கொழும்பிலுள்ள இலங்கை தோட்ட அபிவிருத்தி நிறுவன தலைமையகத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து மேற்படி அலுவலகத்தை விட்டு வெளியேறிய தொழிற்சங்கவாதிகள் குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களது கோவைகளும் கிழித்தெறியப்பட்டன. இத்தொழிற்சங்க வாதிகள் பலத்த காய முற்றனர்.

## வட்ட மேஜை மாநாடு

19-1-84 அன்று நடந்த சர்வ கட்சி மாநாட்டில் இஸ்லாமிய அமைப்புகளின் பிரதிநிதியாக கலந்து கொண்ட கலாநிதி பதியுதீன் மொகமட் சுமார் 45 நிமிடங்கள் வரையில் பேசியிருந்தார். அவர் பேசும் போது தமிழ் பேசும் பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் நிர்வாக மொழி, காணி குடியேற்றம், நீர்ப்பாசனம், மீன்பிடித் தொழில் போன்றவற்றில் ஒரே வகையான இனரீதியிலான பிரச்சனையையே எதிர்நோக்குகிறார்கள். இதனால் தமிழ் பேசும் மக்களின் பகுதிகளில் வரும் முஸ்லிம்கள் தமிழ் மக்களின் இனரீதியிலான போராட்டத்தில் நம்மை இணைத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

நான்கு அம்ச அடிப்படையில் நடத்தப்பட்டு வந்த இச் சர்வகட்சி மாநாடானது கடந்த 6-2-84 சந்திப்பின் பின்பு சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பகிஷ்காரமுடன் குழப்ப நிலமை அடைந்துள்ளது.

சுதந்திரக் கட்சி மாநாட்டை பகிஷ்கரித்தமைக்கு முன்வைத்த காரணங்கள் 1) ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட முடிவை அரசு திணிக்கப் பார்க்கிறது. 2) தமிழர் விடுதலைக் கூட்டணி தமது கட்சியைப் பற்றியும், பௌத்த மதகுருமார் பற்றியும் வெளிநாடுகளில் அவதூறான பிரச்சாரம் செய்கிறது என்பனவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை எங்கணும் வெள்ளம்

மட்டக்களப்பு, அம்பாறை, வாழைச்சேனை, ஏறுவூர், அக்கரைப்பற்று பொத்துவில் முல்லைத்தீவு, அனுராதபுரம், மதவாச்சி, திருகோணமலை, மூதூர் போன்ற முக்கிய பகுதிகளில் வெள்ளப்பாதிப்பு பெருமளவில் ஏற்பட்டுள்ளது. வீதிகளில் வெள்ளம் பாய்வதால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. கல்முனையில் சிறிப்பாயும் வெள்ளத்துக்கு சுமார் இருபது பேர் பலியாகி இருக்கலாமென அஞ்சப்படுகிறது. ஏறத்தாழ 90,000 பேர் பெரும் பாதிப்படைந்து அகதிளாகியுள்ளனர் இவ்வகதிகள் பொது இடங்களிலும் பல பாடசாலைகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் 5, 540 வீடுகள் பாதிப்புற்றன. பொத்துவிலில் 2000 வீடுகள் மூழ்கியுள்ளன என்று தகவல்கள் கூறுகின்றன.

## இலங்கை கலவரம் மனித உரிமைகள் குழு விவாதிக்கும்

ஐ.நா. சபையின் மனித உரிமைகள் குழு பிப்ரவரி 6-ம் தேதி ஜெனிவா நகரில் கூடி இலங்கையில் கடந்த ஆண்டில் நடைபெற்ற இனக் கலவரத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டது குறித்து விவாதிக்கிறது. மனித உரிமைகள் குழுவின் உபகுழு ஒன்று கடந்த நவம்பர் மாதத்திலே இலங்கை சென்று இப்பிரச்சனை குறித்து விசாரித்து அறிந்து மனித உரிமைகள் குழுவிற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

### குறிப்பு :

சில தவிர்க்க முடியாத காரணங்களால் 'பிலிப்பைன்ஸ் எதிர்காலம்' எனும் கட்டுரையின் இரண்டாம் பகுதி இவ்விதழில் வெளியிடமுடியவில்லை என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம்.

( ஆ—ர் )

---

### சென்னையில் கண்காட்சி

ஈழ விடுதலைப் போராட்டம் பற்றி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) யினரால் சென்னையிலுள்ள காங்கிரஸ் மைதானத்தில் ஒரு கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# எமது உணர்வுகள்

—ஈழநேசன்—

எரிந்து போயிற்று எங்கள் தேசம்!
அழிந்து போயின எங்கள் முகங்கள்!
எஞ்சியிருப்பவை எங்கள் கரங்கள்!
கரங்களுக்கின்று கருவிகள் தேவை!

எப்படிச் சொல்வோம் எங்கள் துயர்களை
எழுத்தில் பேச்சிலே வடிக்கக் கூடுமோ?
இப்படிப்பட்ட துயர்களினாலே
எங்கள் உணர்வுகள் அடங்கிப் போகுமோ?

தீயின் நாக்குங்கள் எம் வீட்டைத் தின்றன!
தீய சிங்களர் எமை வேட்டையாடினர்!
போயிற்றெண்ணிலா வீரர் தம்முயிர்!
போக விடுவமோ அவர் தியாகம் வீணிலே!

கொழுந் தொடிக்கவே போன சோதரி
கற்பழித்துமே கொல்லப் பட்டனள்!
அழுது துடிப்பமோ இதற்கு யாங்களே?
அவலம் தீர்க்கவே பொங்கி யெழுகிறோம்!
(எப்படிச்...)

மறியல் கொட்டடி வாய் பிளந்தது
மரணம் எங்களை தழுவ வந்தது
இனியும் நாங்களே பொறுத் திருப்பதோ?
எங்கள் மண்ணினைப் பறிகொடுப்பதோ!
(எப்படிச்...)

ஈழம் ஒன்றுதான் எங்கள் தாகமே
இரத்தம் சிந்தியும் தணித்துக்
கொள்ளுவோம்
இதற்குக் குறைந்ததாய் எந்த ஒன்றுமே
எங்கள் தீர்வென ஆவதில்லையே

வடக்கு என்னடா! கிழக்கு என்னடா!
வரும் துயருக்கு எல்லையுமுண்டோ
இடக்கு செய்பவர் ஈனச் சிங்களர்
இதை எதிர்ப்பவர் யாரும் ஈழவர்
(எப்படிச்...)

எங்கள் மண்ணிலே எங்கள் உரிமையை
எவர்மறுப்பவர் எம் எதிரில் வரட்டுமே!
எங்கள் மண்ணிலே எங்கள் வாழ்முறை
உழைக்கும் நாங்களே உறுதிசெய்குவோம்

ஆயுதங்களால் எம்மை அலைக்கழிக்கிறார்!
அஹிம்சை பேசவோ! அடிமை
நாங்களோ?
ஆயுதங்களே எமது தேவைகள்!
இரண்டிலொன்றினைப் பார்க்கப்
போகிறோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைப்ரஸ் பேச்சு வார்த்தை: நமக்கு ஒரு பாடம்

கலாநிதி சலாகி. ஆர். சொனியல்

சைப்ரசு துருக்கியர் நிர்வாகத்தில் அரசியல் ஆலோசகராக இருக்கும் திரு. சலாகி. ஆர். சொனியல் அவர்கள் "சைப்ரசில் துருக்கியரும், இலங்கையில் தமிழர்களும்" என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. இக்கட்டுரையின் தமிழாக்கம் முன்னர் 'தர்க்கீகம்' இதழ்களில் வெளிப்படப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஆ—ர்

இறுதியில் பெருந் தொகையான மக்களைக் கொன்று குவித்து விட்டு, கிரேக்கத்தினதும் சைபிரசினதும் நெருக்கடியின் கீழ் சைப்பிரஸ் பிரச்சினையில் அங்குமிங்கும் ஊசலாடிக் கொண்டிருந்த மக்காரியோஸ், 1959 இல் துரைமார்களுடன் கிரேக்கருக்கும் துருக்கியருக்கும் அதிகாரத்தை பகிர்ந்தளிக்கும் அடிப்படையிலான குடியரசு ஒன்றுக்கு ஒப்புக் கொண்டார். இதற்கான அரசியல் யாப்பு வரையப்பட்டது. அதில் இருசமூகத்தினருக்குமான உரிமைகள் வரையறுக்கப்பட்டன. ஒப்பந்தம் பிரித்தானியாவுக்கும், துருக்கியருக்கும், கிரேக்கருக்கும் இடையே நடைபெற்றது. அவை சைபிரசின் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்தின. இத் தீவில் இரு வேறுபட்ட மக்கள் வாழ்கிறார்கள் என அரசியல் யாப்பு உறுதிப்படுத்தியது. இவ் யாப்பின் பிரதான அடிப்படை என்னவெனில் ஒரு சமூகம் மற்ற சமூகத்தை ஆதிக்கம் செலுத்தவோ பாரபட்சம் காட்டவோ கூடாது என்பதாகும். இதனால் சைபிரசில் உள்ள சகலரும் நன்மை பெறுவர் - ஒற்றுமையாக வாழ்வர் என எதிர்பார்க்கப்பட்டது. துருக்கியருக்கும் கிரேக்கருக்கும் இடையே நட்பை ஏற்படுத்தியது, எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நீக்கவோ திருத்தவோ முடியாதபடி இவ் வேற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டது.

இந்த யாப்பின் படி கிரேக்கர் ஒருவர் ஜனாதிபதியாக வரவும், துருக்கியர் ஒருவர் உப ஜனாதிபதியாக வரவும் முடியும். பிரதிநிதிகள் சபையில் பின்வருமாறு பிரதிநிதித்துவம் ஒதுக்கப்பட்டது.கிரேக்கர் 70%துருக்கியர்30% அரசாங்க சேவையிலும் போலீஸ் பிரிவிலும் விகிதாசாரம் ஒதுக்கப்பட்டது. இராணுவத்துள் 60%கிரேக்கருக்கும் 40% துருக்கியருக்கும் ஒதுக்கப்பட்டது. கிரேக்கமும், துருக்கியும் அரசகரும மொழியாக்கப்பட்டன. இவ்வாறு பல்வேறு ஏற்பாடுகள் சட்டரீதியாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் அரச இயந்திரம் கிரேக்கர்களின் கட்டுப்பாட்டின் கீழேயே இன்னும் உள்ளது. ஆகையால் 70/30, 60/40 திட்டவட்டமான விகிதாசார ஒழுங்குகள் ஏற்பட்ட போதிலும் துருக்கியருக்கு தமது பாரபட்சமின்மை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது.

வரிச் சட்டங்களை ஏற்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதியும் உப ஜனாதிபதியும் சேர்ந்தோ தனித்தோ வீட்டோ அதிகாரம் பாவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் சைப்பிரஸ் கிரேக்கருக்கும் துருக்கிய சமூகத்தவருக்கும் வெவ்வேறு மாநகர சபை அமைப்புகளும் வெகுவிரைவில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன. ஏனெனில் அதுவரை காலமும் மாநகரசபை இருபகுதியினரையும் கொண்டிருந்தது. இதிலும் துருக்கிய சமூகத்தவரை சைபிரஸ் கிரேக்கர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்ததுடன் அவர்களது தேவைகளை முற்றாக ஒதுக்கியும் வந்தனர். மேலும் யாப்பானது கிரேக்கருக்கும், துருக்கியருக்கும் இனச் சபைகளை (Communal Chambers) ஏற்படுத்தியது. அவை உள்நாட்டு இனம் சம்பந்தமான கல்வி, மத நிர்வாகம், குடும்பச் சட்டம், போன்றவை பற்றிய ஈடுபாடு கொள்ளும் அதிகாரம் வாய்தவையாக காணப்பட்டன. வெளிநாட்டவர் ஒருவரின் தலைமையின் கீழ் கிரேக்கர் ஒருவரும் துருக்கியர் ஒருவரும் அங்கம் வகிக்கும் வண்ணம் அரசியல் சட்ட உயர்நீதி மன்றம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இது நிறைவேற்ற அதிகார நடவடிக்கைகளின் அரசியல் யாப்பு ஏற்பாடுகளினை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் வாய்ந்த ஓர் அமெரிக்க உயர்நீதி மன்றம் போல் காணப்பட்டது.

துருக்கியர் புதிய ஆட்சியின் கீழ் அமைவதற்கு உடன்பட்டனர். ஏனெனில் இதனை ஒரு சந்தர்ப்பம் வழங்கலாகக் கருதினர். ஆனால் மக்காரியோஸ் அவர்கள் மேல் திணிப்பதற்கு வேறு திட்டங்களை வைத்திருந்தார். அவை துருக்கிய சமூகத்தினரின் எதிர்ப்பாற்றலகளை பொருளாதார சீரழிவின் மூலம் உடைத்தெறிந்து இறுதியில் பின் கதவால் (கிரேக்கத்துடன்) இணைக்கும் நீண்டகாலத் திட்டங்களாகக் காணப்பட்டன. மக்காரியோஸ் தனது சொந்தக் கையொப்பம் இடப்பட்ட யாப்பிலுள்ள பெரும் ஏற்பாடுகளினை அமுல் நடத்தத் தொடங்கினர்.

## வரையறைகள் செயலாக்கப்பட்டதா?

1963 ல் பின்வரும் நிலைகள் காணப்பட்டன, துருக்கியர் கடமையிலிருந்து நிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டிவைக்கப்பட்டு தீவு முழுவதும் உள்ள போலீஸ் படை கிரேக்கரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. இராணுவத்தில் முழுமையாக கிரேக்கரே இருந்தனர். அத்துடன் துருக்கியருக்கென ஒதுக்கப்பட்ட 40 என்பது ஒரு போதும் அமுல் நடத்தப்படவில்லை. மக்காரியோஸ் துருக்கியருக்கான வீற்றோ அதிகாரத்தைப் பறிப்பதற்கு முயற்சித்து வந்தார். அத்துடன் பொதுச் சேவையிலுள்ள 70:30 என்னும் ஒழுங்கினை மாற்றியமைக்கவும் தனித்தனி மாநகர சபை அமைப்புகளையும் ஒழித்து தீவு பூராகவும் படிப்படியாக கிரேக்க ஆதிக்கத்தை ஏற்படுத்தும் வகையில் பெரும்பான்மை முறையினை சட்டத்தில் கொண்டு வர முயற்சித்தார். துருக்கியர்கள் வேறு வழியில்லாது அரசியல் சட்ட உயாந்தி மன்றத்திற்கு அப்பீல் செய்து எதிர்க்கத் தொடங்கினர். நீதிமன்றம் கிரேக்கர்களின் ஆயிரக்கணக்கான வழக்குகளால் நிறைக்கப்பட்டன. அவை யாவற்றையும் தீர்ப்பதற்கு ஒரு வாழ்நாட்காலம் தேவைப்பட்டது. இந்நிலைமையே இயற்கையாக அதிகாரப் பகிர்வுகள் சிதைவதற்கும் இரு இன உணர்வுகள் தகர்வதற்கும் வழி கோலியது.

**அகதிகளாக வேண்டிய நிலைமை!**

1963 டிச்ம்பரில் சைப்பிரஸ் கிரேக்கர்களின் தனிப்பட்ட இராணுவம் தீவு முழுவதும் சைப்பிரஸ் துருக்கியர் மீது தாக்குதல் நடத்தியது. துருக்கியர்களும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக எதிர்த்தாக்குதல் நடத்தினார்கள். துருக்கியர்கள் தாம் வாழ்வதற்காக போராட வேண்டியுள்ள நிலையினைக் கண்டு கொண்டார்கள். 1963 க்கும் 1974 க்கும் இடையில் துருக்கிய சமூகத்திற்கு நடைபெற்ற சித்திரவதைகள், கொடூரங்கள், வழிப்பறிகளை விபரிப்பதாக இருந்தால் பலபக்கங்கள் தேவைப்படும்.

1964 ம் ஆண்டின் கிறிஸ்மஸ் சண்டையை தொடர்ந்து அழிக்கப்பட்ட 103 கிராமங்களில் இருந்து சுமார் 25, 000 துருக்கியர்கள் தமது இல்லங்களை இழந்து வெளியேறினர்: 60% மானவர்கள் அகதிகளாயினர். இவர்களில் சுமார் 55, 000 பேர் துருக்கியின் உணவு மருந்து வகை உதவிகளை நம்பி வாழ்ந்தனர். அவர்களது இல்லங்கள், வீட்டு உடமைகள், கடைகள், பழத்தோட்டங்கள், பண்ணைகள் யாவும் கிரேக்க அயலவர்களால் சூறையாடப்பட்டு அழித்தொழிக்கப்பட்டன. இந் நஷ்டங்களையும். இழப்புகளையும் கணக்கிட்டால் அவை பல கோடி ரூபாய்களாகும். சைப்பிரஸ் கிரேக்கர்களின் ஆத்திரத்திலிருந்து துருக்கியர்களின் பாடசாலைகள், பள்ளிவாசல்கள் கூடத் தப்பவில்லை.

உத்தியோகத்தர்கள், குடியரசின் உப ஜனாதிபதி மூன்று துருக்கிய அமைச்சர்கள் உட்பட யாவரும் அவர்களின் கடமைகளில் இருந்து துப்பாக்கி ஏந்திய கிரேக்கர்களினால் தடுத்து நிறுத்தப்பட்டனர். துருக்கிய பகுதியான நிக்கோசியா, கிரேக்க ஆயுத பயங்கரவாதிகளினால் முற்றுகையிடப்பட்டு தடை செய்யப்பட்ட பிரதேசமென பிரகடனப்படுத்தப்பட்டது. துருக்கியர்கள் சரணடைய வேண்டும் இல்லையேல் சகல துருக்கிய பகுதிகளும் அழிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. பின் தங்கிய கிராமங்களில் துருக்கியர்கள் இரவு நேரத்தில் துப்பாக்கிச் சூடுகளுக்கும் பயமுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர். அரசின் பொருளாதார தேக்கத்தினால் துருக்கியர்கள் பாதுகாப்பினை இழந்து துருக்கியின் உதவி மானியத்தில் தங்க வேண்டியவர்களாயினர்.

ஆதலால் என்னுடைய தமிழ் நண்பர்களே! சைப்பிரஸ் வாழ் துருக்கியர்களின் துன்பகரமான பாடங்களிலிருந்து சரியான வழியினை கற்றுக் கொண்டு, சைப்பிரசில் விடப்பட்ட தவறுகளை தவிர்த்துக் கொள்ளுங்கள். அந்த அனுபவங்கள் வழிகாட்டியாகவும் அறிவுறுத்தலாகவும் அமையட்டும். இவ் அனுபவம் ஒரு தீவின் உரிமையாளர்களாக இருந்த ஒரு சமூகம் வேண்டப்படாத, விரும்பப்படாத, ஒதுக்கப்பட்ட சமூகமாக மாற்றப்பட்டதற்கு எதிரான போராட்டமாகும். போதும் போதும் என்ற அளவுக்குப் பாதிக்கப்பட்டு தம்மையே தம் தலைவிதியை நிர்ணயிக்கட்டும் என்ற எண்ணத்துடன் வாழ்வினை நிலைநிறுத்த ஆயுதங்களைக் கையில் தாங்கிய மக்களின் அனுபவம் ஆகும்.

1959 ல் துருக்கியருக்கு அளிக்கப்பட்டது போன்ற கண்துடைப்பான யாப்பு மாதிரியான சூழ்ச்சி வலைகளில் தமிழினம் சிக்கிக் கொள்வதை முக்கியமாக தவிர்க்க வேண்டும். அதிகாரமும் பாதுகாப்புமற்ற ஒரு சமூகத்தின் மீது இரக்கமற்ற ஒரு பெரும்பான்மை திட்டமிட்டு தனது கொடூர பலத்தைப் பிரயோகிக்கும்போது அதைத் தவிர்த்துக் கொள்வதற்கான எந்த வழிமுறைகளும் இந்த காகிதச் சட்டங்களில் இருக்கப் போவதில்லை.

(நன்றி: தர்க்கீகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா போதிக்கும் ஜனநாயகம்

1. சிலியில் சனநாயகப் போதனை... பொதுவுடமைக் கட்சி ஆட்சி முறியடிக்கப்பட்டு சல்பதோர் அலந்தே படுகொலை. சர்வாதிகார பினொசெட்டின் அரசு நிறுவப் பட்டமை.

2. துருக்கியில் சனநாயகப் போதனை—இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டமை பல்லாயிரக்கணக்கான தொழிற்சங்க, மாணவர் கட்சித் தலைவர்கள் உறுப்பினர்கள் சிறையிடப்பட்டமை.

3. பாகிஸ்தானில் சனநாயகப் போதனை...சியாவுல் கக்கின் கொடிய சர்வாதிகார ஆட்சி நிறுவப்பட்டு மனித உரிமைகள் குழிதோண்டிப் புதைக்கப்பட்டமை.

4. தென்னாபிரிக்காவிற்கு சனநாயகப் போதனை...46 இலட்சம் வெள்ளையர் 2 கோடிக்கு மேற்பட்ட சுதேச மக்களை நசுக்கும் விந்தை. அங்கோலா மொசாம்பிக், சிம்பாவே போன்ற சுதந்திர நாடுகள் மீது தாக்குதல். நமீபியாவிற்கு சுதந்திரம் வழங்காமை.

5. ஈரானுக்கு முன்னர் சனநாயகப் போதனை...ஷாவின் குடும்ப சர்வாதிகார ஆட்சி நடந்தமை.

6. நிக்கரகுவாவிற்கு முன்னர் சனநாயகப் போதனை...சோமோசாவின் குடும்ப சர்வாதிகார ஆட்சி இவை முறியடிக்கப்பட்டு மக்கள் ஆட்சி தோன்றியபின் அதனைக் கவிழ்க்க சதிமுயற்சி.

7. தென் கொரியாவில் சனநாயகப் போதனை... எதிர்க்கட்சி தடைசெய்யப்பட்டு, எதிர்க்கட்சித் தலைவர் சிறையிடப்பட்டு மனித உரிமைகள் மீறப்படுகின்றன.

8. எல்சல்வடோரில் சனநாயகப் போதனை... பிற்போக்கு இராணுவ அரசு நிறுவப்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் கொலை செய்யப்பட்டமை, மனித உரிமைகள் பறிக்கப் பட்டமை.

9. பிலிப்பைன்சில் சனநாயகப் போதனை... 10 வருடத்திற்கு மேலாக இராணுவ வல்லாண்மை ஆட்சி அண்மையில் எதிர்க்கட்சித்தலைவர் அக்னோ சுட்டுக் கொல்லப் பட்டமை.

15. கிரெனடாவிற்கு சனநாயகம் போதிப்பதற்காக அண்மையில் பெரும்படை அனுப் பப்பட்டு அமெரிக்காவிற்கு சாதகமான ஆட்சி ஏற்படுத்தப்பட்டது யாவரும் அறிந்ததே.

ஆகவே இலங்கைக்கு நீகள் போதிக்கும் சனநாயகம் எதுவாயிருக்கும் என்பதில் என்ன சந்தேகம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்கள் திரிபுகளுக்கு பதில்-II

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பாட்டாளி வர்க்கத்தைப் பற்றி விளக்கம் தரும் தத்துவ வித்தகன் கார்ல் மாக்ஸ். "நடுத்தர வர்க்கத்தின் கீழ் மட்டத்தவர்களான சிறு வியாபாரிகள், கடை வைத்திருப்பவர்கள், இளைப்பாறிய வியாபாரிகள், கைத்தொழில் செய்பவர்கள், நிலத்தையே உறைவிடமாகக் கொண்ட குடிமக்கள், இவர்கள் எல்லாம் படிப்படியாக பாட்டாளி வர்க்கத்திற்குள் மூழ்கி விடுகிறார்கள். ஏனெனில் அவர்களுடைய குறைந்து ஒடுங்கும் 'முதல்' இன்று இயங்கி வரும் புதிய தொழில்துறை முறைகளுக்குப் போதாமையினாலும் தாக்குப்பிடிக்க முடியாமையாலுமே. அத்தோடு அவர்கள், பிரமாண்டமானமுதலீட்டுக்காரர்களுடைய போட்டா போட்டிக்குள் அமிழ்ந்து வருகிறார்கள். காரணம் அவர்களிடத்தில் உள்ள வேலைத் திறன்கள் புதிய உற்பத்தி முறைகளால் பயனற்றதொன்றாகிவிடுகிறது ஆகவே பாட்டாளி வர்க்கம் ஜன சமுதாயத்தின் சகல வர்க்கங்களிலிருந்தும் திரட்டப்படுகிறது (The lower strata of the middle class-The small trade people, shop keepers and retired trading man generally, the handi crafts men and peasants-. All these sink gradually in to the proletariat partly. Because of their dimunitive capital does not sufficent for the scale on which modern industry is carried on. And in swamped in the competition with the course capitalists partly. Because their skill is rendered worthless by new methods of production. The proletariat is recruited from all classes of the population (C. M 1848, P. 588 Karl Marx-Selected Writtings) இந்த அடிப்படையில், இன்று இலங்கையில் அடக்கி ஒடுக்கப்படும் தேசியம் ஆக தமிழ் இனமும், அடக்கி ஒடுக்கும் 'தேசியம்' ஆக சிங்கள இனமும் இருக்கிறது. இதற்கான அடிப்படைக் காரணத்தைக் புரிந்து கொள்ள வேண்டும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் சரி, அதற்குப் பின்னரும் நாடு தழுவிய ரீதியில் பாட்டாளி வர்க்கத்தின் பிரச்சினை தீர்க்கப்படாததாலேயே அடிப்படையாக நாடு தழுவிய ரீதியில் பாட்டாளி வர்க்கப் பிரச்சினை தீர்க்கப்படாததால், அந்த நாட்டில் வாழும் இனங்களின் பிரச்சினை தலையெடுக்கத் தொடங்கி, இன்று கூர்மையடைந்து, இனவாதப் பிரச்சினையாக ஒரு இனம் மற்றுமொரு இனத்தை இம்சைப்படுத்தவும், அடிமைப்படுத்தவும் முற்பட்டுள்ளது. இந்த வகையில் இன்று ஆளும் இனமாகச் சிங்கள இனமும் ஆளப்படும் இனமாகத் தமிழ் இனமும் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இங்கு மற்றுமொரு அடிப்படை உண்மையையும் உணர்ந்து கொள்ள வேண்டும் அதாவது சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் மனிதாபிமான அடிப்படையிலாயினும் சரி, இன ரீதியானாலும் சரி எந்த விதக் குரோதமோ, பகைமையோ இல்லை. ஆனால் காலாகாலம் தொட்டு வளர்ச்சியடைந்த சிங்கள நிலப் பிரபுத்துவ வர்க்கத்தினர் ஆங்கிலேயர் ஆட்சியிலும் சரி, பின் போலிச் சுதந்திர காலத்திலும் சரி நிலப் பிரபுத்துவ சூழ்நிலையிலிருந்து தம்மை மாற்றிக் கொள்ள முடியாத நிலையில் 'சோவனிஸ்டுகளாக' மாறியுள்ளனர். இதன் சமூக சரித்திர பாரம்பரியத்தைப் பார்க்கும்போது, இலங்கைத் தேசிய காங்கிரசில் இருந்து, சிங்கள மக்களுக்கும் இசுலாமியர்களுக்கும் இடையே நடந்த கலவரத்தின் போது சிங்கள மக்களுக்காக லண்டன் சென்று வாதாடிய நிலப்பிரபுவான பொன். இராமநாதனின் தம்பியார் பொன். அருணசலம் சிங்கள நிலப்பிரபுக்களுடைய கூட்டுறவைத் துண்டித்துக் கொண்டு தமிழர் தேசிய மகாசபைஅமைத்தது முதல் பல நிகழ்ச்சிகள் நடந்துள்ளது. இந்த வரிசையில் உச்சக்கட்டமாக பண்டாரநாயக்காவின் தனிச் சிங்கள மசோதாவை அமுலாக்கியது, அவரது காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சராக இருந்த மார்க்சியவாதியான பிலிப் குணவர்த்தன 1957-ல் நிலப்பிரபுத்துவத்தைக் கூட சாட நெற்காணி மசோதாவை (Paddy Land Bill) பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தபோது, அதை எதிர்த்து பண்டார நாயக்காவின் அமைச்சரவையில் மற்றுமொரு அமைச்சரான குசுமா குணவர்த்தன ''ராணி மாளிகையை'' நோக்கி ஒரு பெரிய ஊர்வலம் நடத்தி அந்த மசோதாவை வாபஸ் பெறச் செய்துவிட்டார். இதற்கு பண்டார நாயக்காவும் உடந்தையாக இருந்தார். காரணம் அவரும் ஒரு நிலப்பிரபுவே. ஏதோ ஆட்சிக்கு வர வேண்டும் என்ற நோக்கினுல் தனிச் சிங்கள மசோதாவின் மூலம் ஆட்சிக்கு வந்தார். ஆனுல் அவர் ஆட்சியில் கூட நிலப்பிரபுத்துவம் அழியாமல் போனுலும் மாற்றம் காணவில்லை. ஆனுலும் திருமதி பண்டார நாயக்கா காலத்தில்தான் இன்னும் முற்ருக அழியாத நிலப் பிரபுத்துவம் மாற்றம் கண்டது. அதாவது சீர்திருத்த (Reform) முறையில் நிலப்பிரபுத்துவ வர்க்கத்தினரின் சொத்துக்களுக்கும் முதாலளிகளின் எல்லையற்ற சொத்துகளுக்கும் உரிமைவரையறை செய்தது. இதே காலத்தில் மலையகத் தோட்டங்களின் உரிமையாளர்களின் சொத்துக்களுக்கும் உரிமை வரையறை செய்யப்பட்டது. ஆனுல் அந்தத் தோட்டங்களுக்கு உடைமையாளர்களான தொழிலாளர்களோ உரிமையற்றவர்களாகவே இருந்தார்கள். இன்னும் அப்படியே.

இந்த இடைக்காலத்தில், அதாவது சுதந்திர காலம் தொட்டு இன்று வரை தன்னிச்சையாக வளர்ந்து வந்த முதலாளித்துவம் இன்றைய ஜனுதிபதி ஆட்சி பெற்றவுடன் ஒரு புதுத் திருப்பம் பெற்றது. அதாவது ''லெய்சி பேயர்'' (Laize Fair) அல்லது கட்டுப்பாடற்ற பொருளாதார முறையைக் கடைப்பிடிக்கத்தொடங்கியது இதனுல் உலக முதலாளிகளும், சிங்கள முதலாளிகளும்தான் கூடுதலாகப் பயனடையத் தொடங்கினர். அங்கொன்றும் இங்கொன்றுமாக தமிழ் முதலாளிகளும், அடிவருடிப் பயனடைகிருர்கள். இதற்குக் காரணம் மாறிவிட்டபோதும், அழியாத நிலப்பிரபுத்துவத்தினுல், காலாகாலம் தொட்டு சிங்கள மக்களிடையே வளர்க்கப்பட்டு வளர்ந்துவிட்ட ''சிங்கள சோவனி சமே''. இதன் மகுடமாகவே இன்றைய சிங்கள முதலாளித்துவம் அமைந்துள்ளது. அது சிங்கள மக்களை தொடர்ந்து உறிஞ்சிக்கொண்டு வருகிறது. அந்த மக்கள் தாம் உறிஞ்சப்படுகிருேம் என்பதை புரியாமலிருக்க, ''சிங்கள சோவனிசம்''. சிங்கள மக்களை திசை திருப்ப, அவர்கள் மத்தியிலிருக்கக் கூடிய உழைப்பின்றி, ஊதியமின்றியிருப்பதால் உத்தமமற்ற தொழில்களைச் செய்யக்கூடியவர்களாக உதிரிப் பாட்டாளிகளை'' ஏவி விடுவது. இவர்கள் மூலம் கட்டவிழ்த்துவிட்ட Lumban Prolitariat-கலவரங்களையே கடந்த காலங்களில் தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ளார்கள். இந்தக் கலவரங்கள், இன்று பிரமாண்ட ருபமெடுத்து, ஒரு இனத்தையே அன்ருடம் அல்லலுறுத்திக்கொண்டிருக்கிறகாலத்தில் தான் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கென ஒரு தனித்தேசிய அந்தஸ்து, அல்லது சுய நிர்ணயம் கோரும்போதுதான், பி.ஏ. காதர் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அனை வரையும் இனம் பிரித்து வடக்கு என்றும், அதிலும் முக்கியமாக யாழ்ப்பாண ஆதிக்க வாதிகள் என்றும், கிழக்கு என்றும், மலையகம் என்றும் ஒரு தனித் தேசியம் என்றும் கற்பிக்க முயலுகிருர்.

இந்த நூலில் திரு. காதரின் பல ஆழ்ந்த கருத்துக்கள் உண்டு. அந்த ஆய்வில், பல மேற்கோள்களை தந்துள்ளார். அதன் மூலம் அவரது பரந்த, ஆழ்ந்த அறிவாற்றலை அறியக்கூடியதாக இருக்கிறது. ஆங்காங்கே ''புலமைக் காய்ச்சல்'' தென்பட்டாலும் அவரது புலமையைப் பாராட்ட வேண்டும். அதே வேளையில் அவரது அணுகுமுறையைப்பற்றி கேள்வி எழுப்ப வேண்டும்.

அவரது நூலில் வெளிப்படையாகவும், தொனிப்பாகவும் காணக்கூடிய பகுதிகளை எடுத்து அவற்றிற்கான விளக்கங்களை இயங்கியல் ரீதியில் ஆயும்போது சூட்சுமமாக, அவர் முன் வைக்க விரும்பும் பிரச்சினை தெளிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சமூக வளர்ச்சியுடன் ஒட்டியே மொழியும் வளர்ந்தது. சிறு சமூகக் குழுக்கள் இரண்டறக் கலந்து பெரும் குழுக்கள் தோன்றின. இன்று கலப்பில்லாத எந்த மொழியையும் எந்த நாட்டிலும் காண முடியாது. எதிர்காலத்தில் முழு உலகும் மக்கள் ஒரு மொழி பேசும் பழக்கம் வரத்தான் போகிறது''.

இது ஒரு பிற்போக்குவாதியின் கருத்து மட்டுமல்ல. ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் அடிவருடிகளின் கருத்துமாகும். ஆங்கிலேயர் அகிலத்தை ஆண்டபோது,அவர்களது மொழியைத் திணிக்கப் பார்த்தார்கள். உலகம் முழுவதும் தனது மொழியையே பேச வேண்டும் என எதிர்பார்த்தார்கள். காரணம் இந்த அகிலத்தையே சுரண்ட வேண்டும் என்ற நோக்கில். அவர்களுக்கு வியாபாரமும், அதற்கான உலகச் சந்தையுமே முக்கியம். இதைப் புரவலன் லெனின் அப்பட்டமாகத் தெளிவுபடுத்துகிறார்.

''வியாபாரச் சரக்கின் உற்பத்தியின் முழு வெற்றிக்கு, முதலாளித்துவ பூர்சுவாக்கள் தமது சொந்த நாட்டு வியாபாரச் சந்தையை கைப்பற்ற வேண்டும். அத்துடன், அரசியல் ரீதியாக பிரதேச எல்லைப் பகுதிகள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். அங்கு வாழும் மக்கள் பேசும் ''மொழி'' ஒரே மொழியாக இருக்க அந்தப் பிற எல்லைகளில் பேசப்படும் மொழிகளின் வளர்ச்சிக்கு இடையூறுகள் ஏற்பட்டு, அந்த மொழியின் இலக்கியம் வளர்ச்சி ஒருமைப்படுவதை இல்லாமல் செய்வதே.

"For complete victory of commodity production, the bourgecsie must capture the home market and there must be politically united territories whose population speak a single language with all obsatacles to the development of language and to its consolidation its literature climinated."

இந்த வகையான ஏகாதிபத்திய ஆதிக்கத்தையும் அந்த அடிப்படையிலான தன் மொழியுமே இருக்க வேண்டுமென்று கனவு காண்கிறார் காதர். இதே கனவை என்றைக்கோ ''செய்ரு பொல்ட்'' என்ற அமெரிக்கர் கூட கூறி வைத்திருக்கிறார். இரண்டாவது மகாயுத்தத்திற்குப் பின் விண்டன்ஷொக்லி என்பவர் இதே கருத்தையே தனது ஒரு உலகம் (one world) என்ற நூலில்தெரிவித்ததோடு மட்டுமில்லாமல் அது சாத்தியமில்லை எனவும் கூறுகிறார். இது இயங்கியல் ரீதியிலும் நியதியற்றதொன்று. ஏனெனில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில்கூட அவர்கள் ஆட்சி செய்த பிராந்தியத்திலும்கூட அவர்கள் மொழி ஏனைய நாட்டு மொழிகளையோ இனவாரி மொழிகளையோ ஆட்கொள்ளவில்லை. ஆனால் சொற்ப மாறுதல் ஏற்பட்டுள்ளது உதாரணத்திற்கு ஆங்கிலத்திலுள்ள 'முலகுரொனி' (Mulagutony) என்ற வார்த்தை ''மிளகு தண்ணீர்'' என்ற வார்த்தையிலிருந்தே வந்துள்ளது. இது போல் ஆங்கில சொற்களான தார் (Tar), கார் (Car) என்ற சொற்களை தமிழில் நாம் பார்க்கக்கூடியதாக உள்ளது. இவை அனைத்தும் பொருளாதார உறவுகளால் ஏற்படுபவை. ஆனாலும் அந்நியச் சொற்கள் ஒரு மொழியில் பாவிக்கப்படுவதை ஆணித்தரமாக கண்டிப்பவர் லெனின்.

''நாங்கள் ருசிய மொழியுடன் பிற மொழிச் சொற்களை சேர்ப்பதன் மூலம் ருசிய மொழியை கொச்சைப்படுத்துகிறோம் ஏன் பிறமொழிச் சொற்களை உபயோகிக்க வேண்டும்'' எனக் கேட்கிறார். இதன் மூலம் அவர் மொழிக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை மற்றுமொரு சான்றின் மூலம் அறியலாம். ''மொழிதான் மாந்தர்களுரிய மிக முக்கியமான உறவு சாதனம்.'' (Language is the most important means of inter course) இதை முதலாளித்துவ சக்திகள் தமக்குச் சாதகமாக உபயோகிக்கும்போது பிற மொழிகளுக்கும் மேல் ஆதிக்கம் செலுத்தி அந்த மொழிப் பிரதேசங்களையுங் கட்டாயமாக இணைத்துக் கொள்கிறது பிரித்தானியர் தமது காலத்தில் சிங்கள அரசர்களுடைய பகுதிகளையும், தமிழ் அரசர்களுடைய பகுதிகளையும் இணைத்துத் தமது பொருளாதார எண்ணத்தை மேற்கொண்டனர். இந்தக் காலத்தில்தான் இந்தியாவிலிருந்து அதுவும் தமிழ்ப் பகுதிகளிலிருந்து தமிழ் மக்களைக் கட்டாயமாக கூட்டி வந்து குடியமர்த்தினர்கள்.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமாகடல் பற்றிய ஓர் ஆய்வு

**(டியாகோ காசியாவிலிருந்து திருகோணமலை வரை)**

**இக் கட்டுரை இலண்டனிலிருந்து ஆங்கிலத்தில் வெளிவரும் ஈரோஸ் டிசம்பர் 1983 இதழில் இருந்து பெறப்பட்டது. மொரீசியசைச் சேர்ந்த ராதா கங்கூலி என்னும் ஆய்வாளர் ஈரோஸ் அமைப்பின் விஞ்ஞான அறிஞர் சபையினுல் இலண்டனில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்துமாக்கடல் பற்றிய ஆய்வு மாநாட்டில் ஆற்றிய உரையின் தமிழாக்கமே இது.**

இத்தலைப்பானது, இந்துமாகடல் பற்றிய ஆய்வு ஏன், யாருடைய நலன்களுக்காக, யாரால் செய்யப்படுகிறது என்ற ஓர் முக்கிய வினவை உடனடியாக எழுப்புகிறது. அடுத்த சில நிமிடங்களுக்கு இந்துமாகடலில் நடைபெறும் "இராணுவமயமாக்குதல்" நடவடிக்கைகள் பற்றிக் கூறுவதற்கு முயல்கிறேன். இந்துமாகடலுக்கு ஆபிரிக்க ஆசியமாக்கடல் என்று பெயரிடப்பட வேண்டும் என நான் எண்ணுகிறேன்.




இந்துமாக்கடல் பற்றி ஒருவன் தன் பார்வையை திருப்பத் தொடங்குகையிலே அவன் முதன் முதலில் சந்தேகமற உணர்ந்துகொள்ளத் தொடங்குவது இந்துமாகடலில் ஐக்கிய அமெரிக்காவின் ஆதிக்க சக்தியே ஆகும். இந்த ஆதிக்க கைமாற்றமானது இரண்டாவது உலகமகா யுத்தத்தின் பின்னர் பிரித்தானியரிடம் (ஆங்கிலேயர்) இருந்து அமெரிக்கரின் கைக்கு மாறியது. இரண்டாம் உலகப்போர் முடிவுற்ற பின்னர் பிரதான மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரம் முற்றுக சிதைவுற்றிருந்தது. சோவியத் யூனியன் தன்னுடைய இரண்டு கோடி மக்களையும் முழுப் பொருளாதாரத்தையும் இழந்த நிலையில் அப்போது வலுவானதும் சக்தி பொருந்தியதாகவும் தோற்றமளித்த ஒரே நாடு ஐக்கிய அமெரிக்கா மட்டுமே ஆகும். இதனை உணர்ந்த அமெரிக்கா மிகத் துரிதமாக அந்த இடத்திற்கு தன்னை தயார் படுத்தியது. "உள் நாட்டில் மாற்றங்கள் அற்ற நிலையில் சக்தி வருவாய் என்பன மீள் பங்கிடப்படாத நிலையில், அமைப்புகள் மாற்றப்படாத நிலையில் அமெரிக்கா செழுமையாக திகழ்வதற்காக அமெரிக்கா திட்டமிடல் நிபுணர்கள் உலகின் குறிப்பிடக்கூடிய அளவு பகுதியையாவது தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்." என பேராசிரியர் சொமஸ்கி வாதிடுகிருர். இந்த குறிப்பிட்ட அளவு பகுதிக்குள் முழு மேற்கத்திய அரைக் கோளமும் முன்னைய பிரித்தானிய சாம்ராச்சியமும் தூர கிழக்கு நாடுகளும் அடங்கும். அமெரிக்காவின் பூகோள அரசியலைக் கட்டுப்படுத்தும் திட்டத்தினுள் இந்துமாகடலும் அடங்குகிறது. என்பதே இங்கு குறிப்பிடத் தக்கது.

ஐக்கிய அமெரிக்காவின் இந்துமாக்கடல் ஊடுருவலானது பிரித்தானிய சாம்ராச்சியம் அழிவடைந்த அதே கால கட்டத்தில் நடைபெற்றது. அறுபதாம் ஆண்டுகளின் தொடக்கத்திலேயே ஓரளவுக்கு பலம் குன்றியிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியா சுயஸ் கால்வாய்க்கு கிழக்கேயுள்ள பகுதிகளில் இருந்து வெளியேறத் தீர்மானித்து. எங்கெல்லாம் இத்தகைய ஆதிக்க வெற்றிடம் ஏற்பட்டதாக அமெரிக்கா கருதியதோ அங்கெல்லாம் தன் காலை ஊன்ற தவறவில்லை. ஆனல் பிரித்தானிய சாம்ராச்சிய வீழ்ச்சியானது தானாக ஏற்பட்ட தொன்றல்ல, ஆங்கிலேயர் தமது காலனிகளுக்கு சுதந்திரம் கொடுக்கப்படாது என்பதில் மிகவும் இரக்கமற்ற முறைகளில் நடந்து கொண்டார்கள். பல ஆப்பிரிக்க நாடுகளின் காலனித்துவத்துக்கெதிராக வெடித்த புரட்சிகள் அதனை ஆட்டம் காண வைத்தது. பற்றிஸ் லுமும்பா போன்ற தேசியத்தலைவர்களின் தோற்றம் அமெரிக்க நிர்வாகத்தை ஆட்டம் காண வைத்தது. மேற்கத்தைய காலனித்துவத்துக்கு எதிரான புரட்சிகளினல் நலன்கள் பாதிக்கப்பட்டு விடுமோ என அமெரிக்கா அச்ச முற்றது. அமெரிக்கா தன்னுடைய தேவைகளுக்கும் இலாபங்களுக்கும் சாதகமான முறையிலேயே தன்னுடைய வெளிநாட்டுக் கொள்கைகளை வரையறுத்துள்ளது என்பது முக்கியமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய தொன்ருகும். தனக்குத் தேவையான பொருளாதார மூல வளங்களை அடைவதற்கான உத்தரவாதத்தை உறுதிப்படுத்துவதற்காக தன்னுடைய படைவலிமையை பிரயோகிப்பது அமெரிக்க நிருவாகத்தின் நிரந்தரமான கொள்கைகளில் ஒன்ருகும். ஆபிரிக்க ஆசிய நாடுகளிலுள்ள மூலவளங்களானது மேற்கு நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு குறிப்பிட்டுக் கூறக் கூடிய அளவிற்கு அவசியமாகிறது. பெற்ரோலியம் இவற்றுள் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. பெற்ரோலியம் அமெரிக்காவுக்கும் மேற்கு ஐரோப்பாவுக்கும் மட்டும் அவசியமான மூல பொருளல்ல; யப்பானுக்கும் இது மிகவும் அவசியமானதாகும். பெரிய அளவிலான பெற்ரோலியம் ஏற்றுமதி நன் நம்பிக்கை முனையை சுற்றிய பாதையில் அதாவது இந்து சமுத்திரத்திற்கூடாக நடைபெறுகிறது. 1985-ம் ஆண்டளவில் உலகின் பெற்ரோலிய உற்பத்தியில் 35 வீதமானது கடலுக்கடியில் இருந்து பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அறுபதாம் ஆண்டுகளில் 7, 0000 லட்சம் பவுண்கள் எண்ணெய் வள ஆய்வுக்காக இந்துமாக்கடலிலும் சீனக் கடல்களிலும் செலவழிக்கப்பட்டுள்ளது. எண்ணெய்க்கடுத்ததான மூலப் பொருட்களான, குரோம், யூரேனியம், கோல்பாற்று செம்பு என்பனவும் தேயிலை, சீனி, கறுவா: தேங்காய் போன்றவற்றின் உற்பத்திகளுமே முக்கிய இடத்தை வகிக்கின்றன. உலகம் அறிந்துள்ள குரோம் கனியத்தின் 90 வீதமான பகுதி சிம்பாவேயிலும், தென் ஆபிரிக்காவிலுமே காணப்படுகின்றது. இந்துமாக் கடல் பிரதேசங்கள் உலகின் 80 வீதமான பகுதி தங்கத்தையும் 50 வீதமான தகரத்தையும் 77 வீதமான இயற்கை ரப்பரையும் உற்பத்திச் செய்கின்றன.

மேலும் மூன்ரும் உலக நாடுகள் மேற்கத்தைய உற்பத்திப் பொருட்களுக்கு இலாபகரமான சந்தைகளாக மாறி வருகின்றன. 1982-ம் ஆண்டு 46 சதவீதமான அமெரிக்க ஏற்றுமதிப் பொருட்கள் மூன்ரும் உலக நாடுகளிலேயே சந்தைப்படுத்தப்பட்டன. இந்நாடுகள் அமெரிக்காவின் முதலீடுகளுக்குத் திறந்து வைக்கப்படுகின்றன. இந்துமாக்கடலில் நிலை கொண்டிருக்கும் அமெரிக்க இராணுவமானது டியகோ காசியாவில் மையப்படுத்தப்பட்டுள்ளது. பூகோள அமைப்பின் படி டியாகோ காசியா இக்கடலின் மத்தியிலும், ஆபிரிக்கா, மத்திய கிழக்கு ஆசியா ஆகியவற்றிலிருந்து ஏறக்குறைய சமமான தூரத்திலும் உள்ளது. இத்தீவானது அமெரிக்க கடற்படை வல்லுனர்கள் கற்பனையில் எதிர்பார்த்த அளவுக்கு மிகப் பொருத்தமானதாக அமைந்து விட்டது.

60 ம் ஆண்டுகளின் இறுதிப் பகுதியில் அமெரிக்காவுக்கும், பிரித்தானிய அரசுக்கும் இடையே டியாகோ காசியா பற்றிய பேச்சு வார்த்தைகள் ஆரம்பமானது. 1965-ல் மொரீஷியஸ் சட்டரீதியாக சுதந்திரம் அடைவது பற்றிய பேச்சு வார்த்தைகள் நடந்தபொழுது பிரித்தானியா டியாகோ காசியாவை மொரீஷியசில் இருந்து பிரித்து உருவாக்கப்பட்ட காலனியான B I O T உடன் சேர்த்துக்கொண்டது. ஐ. நா. வின் தீர்மானம் இல: 2066 வது மொரீஷியசின் எல்லைகளைத் துண்டாடுவதும் அதன் பிரதேச ஒருமைப்பாட்டை உருக்குலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுமான நடவடிக்கைகளை பிரித்தானியா எடுக்கக்கூடாது என இருந்தபோதும் பிரித்தானியா இதனை புறக்கணித்தது.

எப்படி இருந்த போதிலும் டிசம்பர் 1966ம் ஆண்டு பிரித்தானியா அமெரிக்காவுடன் "பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இந்து சமுத்திரத்தில் சில தீவுகளை வழங்குதல்" என்ற ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. இவ்வொப்பந்தத்தின் கீழ் டியாகோகாசியா தீவானது அமெரிக்காவுக்கு ஆரம்பத்தில் 50 வருடங்கள்மேலும்20வருடங்கள் வைத்திருக்க கூடியதுமான குத்தகைக்கு விடப்பட்டது. இதற்கு கைமாறாக அமெரிக்கா 11.5 மில்லியன் டாலர்களை முனைவாக்க ஏவுகணை ஆய்வு அபிவிருத்தி செலவு தொடர்பாக வழங்கியது, ஆனால் இப்பணம் ஏதோ வழியில் டியாகோகாசியா மக்களை அப்புறப்படுத்தப் பாவிக்கப் பட்டது ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட கையோடு இராணுவ தள அமைப்பு வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது முதலாவதாக டியாகோகாசியா "கண்டிப்பான தொலை தொடர்பு வசதிகள்" அமைந்த தளமாக அமெரிக்க நிபுணர்களால் வகைப்படுத்தப் பட்டது. இன்று மிக நவீன மயமாக்கப்பட்ட இத்தளத்தின் மிகச் சிறந்த தொலைதொடர்பு சாதன வசதிகள் 70 களிலேயே உருவாக்கப் பட்டுள்ளது. இத் தீவானது இத்தகைய உருமாற்றம் பெற்றதில் இரண்டு நேரடிக்காரணிகள் பிணைந்து காணப்படுகின்றன. ஒன்று இப் பிரதேசப் பகுதிகளில் நடைபெற்ற அரசியல் நிகழ்வுகள். மற்றொன்று ஏவுகணை தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட வளர்ச்சி. இரண்டு காரணிகளையும் தனித்தனியே நோக்குவோம். 1971 ம் ஆண்டு இந்திய - பாக்கிஸ்தான் பங்களாதேஷ் பிரச்சனை மீதான போர் மூண்டபோது அமெரிக்கா தன்னுடைய வலிமை மிக்க கடற்படையை இந்து மாக் கடல் நோக்கி நகர்த்தியது. பின்னர் 1973 மீ ஆண்டு மத்திய கிழக்கு பிரச்சனை உருவான போது தனக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் நிலைக்கு ஈடுகொடுப்பதற்காக அமெரிக்கா ஏழு முக்கியமான தரைப்படை, விமானப் படை பிரிவுகளை இந்துமாக் கடலில் நிலை நிறுத்தியது. இந்நிகழ்ச்சியை வைத்தே 1974ல் டியாகோகாசியாவின் வசதிகளை விரிவு படுத்திக் கொள்வதற்கு தீர்மானம் எடுக்கப் பட்டது. மத்திய கிழக்கில் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் மேற்கத்திய கைத்தொழில் நாடுகட்கு பொருளாதார சிக்கல்களை ஏற்படுத்துமானல் அமெரிக்கா இராணுவத்தின் மூலம் இவற்றை அச்சுறுத்துவது என்ற முன்னாள் அமெரிக்க வெளி விவகார அமைச்சர் கிசிஞ்சரின் பிரபலமான கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இத் தளத்தை தரமுயர்த்த வேண்டும் என்ற கருத்தை அமெரிக்கஅரசு ஏற்றுக்கொண்டது. இதன் அடிப்படையில் ஓர் கண்டிப்பான (அவசியமான) தொலைத் தொடர்பு வசதியுடைய தளமாக டியாகோகாசியா உருவானது.

ஈரானியப் பிரச்சனை தன்னுடைய இராணுவ தள விஸ்தரிப்பை நியாயப் படுத்த இன்னொரு நல்ல சந்தர்ப்பத்தை அமெரிக்காவிற்கு ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சரின் காரிய தரிசி திரு பிரவுன் (Mr BROWN) கடல், ஆகாயபடை பிரிவுகளின் துணையோடு பாரசீக வளை குடாவிலோ வேறெப்பிரதேசத்திலோ ஊடுருவக் கூடிய (INTERVENTION) 100,000 பேரைக் கொண்ட துரித செயற்படும் படைப் பிரிவை (RAPID DEPLOYMENT FORCE) தயார் செய்யும் படி அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனுக்கு உத்தர விட்டரர். தொடர்ந்து பணயக் கைதிகளை மீட்டெடுத்த நிகழ்ச்சியை வியட்னாமில் ஏற்பட்ட தலைகுனிவை நிவர்த்தி செய்து கொள்வதற்கு ஓர் சந்தர்ப்பமாக அமெரிக்கா பயன்படுத்த முடிந்தது. 1983ல் R. D. F. முழு அளவிலான அதிகார முடைய தாக உருவெடுத்தது. இது கடற்படை ஆகாயப்படை பராமரிப்புப் போன்ற ஐரோப்பிய, அத்லாண்டிக் பசுபிக் படைப்பிரிவில் காணப் படுவது போன்ற பிரிவுகளை கொண்டிருந்தது. கடற்படையானது 3 விமானத் தாங்கிக் கப்பல்களையும் அதற்குரிய பாதுகாப்பு கப்பல்களையும் ஐந்து விமான எதிர்ப்புப் பிரிவுகளையும் ஆயுதங்களையும் ஏனைய அத்தியாவசிய பொருட்களைக் கொண்ட 13 கப்பல்களையும் கொண்டுள்ளது.

இப்போது அணுசக்தித் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியோடு இத்தள உருமாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி கவனிப்போம். 1961, 62 உருவாக்கப்பட்ட முனைவாக்கப்பட்ட A1, A2, பொல்ரிஸ் ஏவுகணைகளை பால்டிக் கடல் பகுதியிலும் கருங்கடல் பிரதேசத்திலும் மட்டுமே இயக்க முடியும். ஆனால் 1964 ம் ஆண்டளவில் உருவாக்கப்பட்ட முனைவாக்கப்பட்ட A3 வகையான 2500 மைல் வீச்சினையுடைய ஏவுகணைகள் உருவாக்கப்பட்ட பின் இந்துமா கடல் பிராந்தியத்தின் கேந்திர முக்கியம் அதிகரித்தது. இவ்வகையான A3 ஏவுகணைகள் சோவியத்தின் வடக்கு தெற்கு பகுதிகளிலிருந்து லெனின் கிராட் வரை தாக்கக்கூடிய வலிமையுள்ளவை. கடந்த10 ஆண்டுகளுக்குள் ஏழு வகையான மிக்க வலிமையுடைய பொசிடோன் ஏவுகணைகள் தயாரிக்கப்பட்டதும் இவ்வகையான ஏவுகணைகளும் பொல்ரிஸ் ஏவுகணைகளும் தற்போது இந்துமாகடலில் குறிப்பாக டியாகோ காசியாவில் இருப்பதும் யாவரும் அறிந்த முழு உண்மையாகும்.

டிரைடென்ட் (TRIDENT) வகை ஏவுகணை நீர் மூழ்கிகள் இந்துமாகடல் பிராந்தியத்தில் விரைவில் இயக்கப்படும் என இவ்வகையான ஏவுகணைத் துறையில் நிபுணரான (R. ALDUDGE) கூறியுள்ளார். இவ்வகையான ஏவுகணைகள் மிக இலகுவில் பராமரிக்க கூடியவை. அத்தோடு இவை இந்துமா கடலின் பெரும் பகுதியை கண்காணிக்கும் வகையில் (தமது இலக்கு வீச்சுக்கு உட்பட்ட நிலையில்) பயன்படுத்தக் கூடியதாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இவை பராமரிப்பிற்காகவோ அல்லது ஊழியர் மாற்றத்திற்காகவோ தமது தளத்திற்கோ அல்லது வாஷிங்டனுக்கோ செல்ல வேண்டியிருந்தால் அவை தமது 60 நாள் ரோந்துக் கடமையில் அரைப்பகுதியை தம்து தளங்களிலிருந்து வருவதற்கும் செல்வதற்குமான பயணத்திலேயே செலவழிக்க நேரிடும் என்றும் எனவே இத்தகைய நிலையில் இவற்றிற்கு முன்னணித் தளங்கள் தேவைப்படும் என்றும் அவ்வகையில் டியாகோ காசியா நிச்சயம் பயன்படும் என இந்நிபுணர் கருதுகின்றார்.

தற்போதைய நிலையில் இத்தளத்தில் DC 8. C. 141, K. C. 135, போன்ற குண்டு வீச்சு விமானங்கள் தங்கி நிற்க முடியும். சர்வதேச அமைதிக்கான ஆய்வு நிறுவனத்தின் முன்னாள் இயக்குனர் பானபே (BANA BAY) என்பவர் கருத்துப்படி முழுதாக நிரப்பப்பட்ட நிலையில் கூட B 52 குண்டு வீச்சு விமானங்களை இத்தளத்தில் பராமரிக்க முடியும். மேலும் அமெரிக்க விமானப்படை திட்டமிடல் அதிகாரியின் கருத்துப்படி அணுவாயுதங்களை கொண்டுள்ள குண்டு வீச்சு விமானங்களைக் கூட இத்தளத்தில் நிறுத்தமுடியும். 15,000 கடலோடி இராணுவ வீரர்கட்கு 30 நாட்களுக்கு தேவையான தண்ணீர், தளபாடங்கள் வெடிமருந்து போன்றவற்றைக் கொண்டு தயார்படுத்தப்பட்ட 7 பெரும் கப்பல்கள் இத்தளத்தில் ஏற்கனவே தளமிட்டுள்ளன.

அமெரிக்காவின் பாரிய போர்க்கப்பலான "யம்ப்" (Jump) தங்கி நிற்க கூடிய வகையில் இத் தீவின் கடனீரேரிப்பகுதி ஆழமாக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

டியாகோ காசியா தீவைவிட ஓமான், மொம்பாசா போன்ற இடங்களில் தளங்கள் அமைக்கும் திட்டங்களை நிக்சன் நிருவாகம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆரம்பத்திலிருந்தே அமெரிக்கா சோவியத்தின் இந்துமாகடல் ஊடுருவலைத் தடுப்பதற்காகவே டியாகோ காசியா தீவு நமக்குத் தேவைப்படுவதாகக் கூறிவருகின்றது. தற்போது, சி. ஐ. ஏ. இன் அறிக்கைகளின்படி, 1968 ம் ஆண்டளவிலேதான் சோவியத்தின் போர்க்கப்பல்கள் முதற்தடவையாக இந்துமாக்கடலில் தென்பட்டனவாயினும் அதற்கு ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்னரே டியாகோ காசியா தொடர்பான இராணுவத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன என்பது புலனாகின்றது. 1970 ம் ஆண்டில் நடந்த செய்திப் பத்திரிகைகள் மாநாடொன்றில் முன்னாள் படைத்தளபதி அலெக்சாண்டர் கெய்க் ஒப்பீட்டளவில் பார்க்குமிடத்து 1962 ம் ஆண்டில் சோவியத்தின் இராணுவவலிமை 10: 1 என்ற விகிதத்திற்கு குறைவாகவே இருந்தது என்றார். உண்மையில் ஆழமாக நோக்குமிடத்து இந்துமாக்கடலில் சோவியத்தின் நடமாட்டம் என்ற காரணம் காங்கிரசிடம் இருந்து இத்தளம் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீட்டிற்கான அனுமதியைப் பெறுவதற்காகப் போடப்பட்ட முடுதிரை என்பது புலனாகும். ஆனால் இன்றைய நிலை வேறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத்திற்கும் இன்று இந்துமாக்கடலில் அக்கறை இருப்பது தெரிந்ததே. அமெரிக்காவுக்குள்ளது போல் இந்துமாக்கடலில் சோவியத்திற்கு தளங்கள் இல்லை எனினும் இப்பிரதேசத்தில் பல துறைமுக வசதிகளை அது பெற்றிருக்கிறது. இவற்றுள் எய்டனும், பல தென்யேமன் துறைமுகங்களும் பிரதானமானவை.

1982 ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் பாரிய அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன. இக்காலக் கட்டத்திலேயே பாரதப்பிரதமர் இந்திராகாந்தி அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா பாரசீக வளைகுடா நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இப்பயணத்தின் நோக்கங்கள் வருமாறு.

1. சோவியத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதால் ஏற்பட்ட ''தனிமை'' (Isolation) நிலையை மாற்றல், சோவியத்துடனான நெருக்கம் அணிசேரா நாடுகளின் தலைவி என்ற நிலைக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தியது. மேலும் ஆப்கானிஸ்தானில் சோவியத்தின் நடவடிக்கைகளைக் கண்டிக்க முன்வராததோடு கம்பூச்சிய அரசையும் இந்திராகாந்தி அங்கீகரித்திருந்தார், இவை அமெரிக்காவுக்குத் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தன என்பது வெளிப்படையாகும்.

2. தனது இராணுவத்தை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் இந்தியாவிற்கு மேற்கத்தைய தொழில் நுட்பமும், ஆயுதங்களும் தேவைப்பட்டன. இந்தியா ஆயுத உற்பத்தியில் சுய முயற்சியில் தங்கியிருக்க விரும்பியமை அதன் பாதுகாப்புச் செலவினங்களை 1982 ல் ஒரு பொழுதும் இல்லாத அளவிற்கு அதிகரிக்கச் செய்தது. இவ்வளவு காலமும் ஆயுதவினியோகத்திற்கு சோவியத் யூனியனிலேயே இந்தியா தங்கியிருந்தது. 1980 ம் ஆண்டில் செய்யப்பட்ட ஒப்பந்தமொன்றின்படி மிக்-23 (MIG 23) வகை போர் விமானங்களையும் T 72 வகை டாங்கிகளையும் உற்பத்தி செய்வதற்காக உரிமையை இந்தியா பெற்றுள்ளது. மூன்றும் உலக நாடுகளிலே இராணுவ, கைத்தொழில் துறையில் முன்னேறியிருக்கும் நாடுகளில் இந்தியாவும் அடங்கும். அரசு வகைப்பட்ட 233 தொழிற்சாலைகள் டாங்கி எதிர்ப்பு, விமான எதிர்ப்புப் பீரங்கிகள், வெடிகுண்டுகள், ரொக்கட்டுக்கள் ஏவுகணைகள் போன்ற பல தொடர்ச்சியாக நவீனமாக்குதலுக்குட்படுகின்ற பலவகை ஆயுதங்களை உற்பத்தி செய்கின்றன. இத் தொழிற்சாலைகளில் ஏறத்தாழ 173,000 தொழிலாளர் பணிபுரிகின்றனர். இந்நிலையில் திருமதி. காந்தி தமக்கான ஆயுதவினியோக மூலங்களை மாற்ற விரும்புகிறார். அண்மையில் மேற்கு ஜெர்மனியுடன் இரண்டு வகை நீர்மூழ்கிகப்பல்களைக் கொள்வனவு செய்து கொள்வதற்கும் இன்னும் இரண்டினை பம்பாயிலே பொருத்தியிணைப்பதற்கும் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொண்டார். இன்னொரு பிரான்சுடனான ஒப்பந்தத்தின் மூலம் நாற்பது ''மிராஜ் 2000' (Mirage 2000) போர் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கும் மேலும் 110 இவ்வகை விமானங்களை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கும் இந்தியாவிற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

வல்லரசுகளுக்கிடையேயான ஆயுதப் போட்டியை விமர்சித்துக் கொண்டிருக்கையிலேயே இந்தியா தன்னுடைய முதலாவது அணுக்குண்டை வெடித்துப் பரிசிலனை செய்தமை இங்கு ஞாபகத்தில் வைக்க வேண்டியதோன்றுகும்,

1963 ம் ஆண்டு இந்தியாவும் அமெரிக்காவும் செய்து கொண்ட உடன்படிக்கையொன்றின்படி முப்பது வருடங்களுக்கு தாராப்பூர் அணுவாலைக்குத் தேவையான செறிவாக்கப்பட்ட யூரேனியத்தை வினியோகிப்பதாக அமெரிக்கா பொருந்திக் கொண்டது. ஆனால் அமெரிக்காவிலிருந்து அணுசக்தி தொழில் நுட்பம் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படுவது தொடர்பான விதிமுறைகள் அமெரிக்காவில் இறுக்கமாக்கப்பட்டதைத் தொடர்ந்து 1978 இன் பின் யூரேனியம் இந்தியாவுக்கு வினியோகிக்கப்படவில்லை. 1982ல் இந்நிலையில் மாற்ற ஏற்பட்டது. திருமதி. காந்தியின் அமெரிக்க விஜயமும், பிரான்சு ஜனாதிபதியின் இந்திய வருகையும் 1982



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பரில் பிராங்கோ-இந்தியன் ஒப்பந்தம் உருவாக வழியை ஏற்படுத்தியது.

இதன் மூலம் 1963 இல் செய்யப்பட்ட இந்தியா-அமெரிக்க உடன்படிக்கையினை நிறைவேற்றும் பொறுப்பை (அமெரிக்காவின் சம்மதத்தோடு) பிரான்சு ஏற்பதாகவும், முன்னர் அமெரிக்கா வற்புறுத்தியது போல மேலதிக விதிமுறைகளை பிரான்சு வற்புறுத்துவதில்லை எனவும் உடன்பாடு கொண்டு வரப்பட்டது. இதனால் தாராப்பூர் அணுவாலைக்கு தெரிவிக்கப்பட்ட யூரேனியம் கிடைப்பது உறுதியாயிற்று.

இப்பிராந்தியத்தின் முக்கிய நாடுகள் தமது அணுசக்தித் திட்டங்களுக்கு அனுமதியையும், உதவிகளையும் தொடர்ந்து பெற்று வருவதனை அவதானிக்கும்போது இந்துமா கடலை அணுவாயுதப் போட்டியிலிருந்து விடுபட்ட அமைதிப் பிராந்தியமாக்கும் முயற்சி எதிர்காலத்தில் சாத்தியமற்றதென்பதுபுலனாகிறது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் இவ் விடத்தில் நம்பிக்கையூட்டக்கூடிய அறிகுறிகளை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால் இவ்வருடத்தில்தான் திருகோணமலையிலுள்ள சினன்குடா எண்ணெய் களஞ்சியப் பண்ணையினை தனது கட்டுப்பாட்டினுள் கொண்டுவரக்கூடிய வசதியினைப் பெற்றுள்ளது. இந்துமாகடலிலேயே இக்களஞ்சியப் பண்ணை மிகப்பெரியது என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக டெக்டாசிலுள்ள (Texas) கரையோரக் கூட்டுத்தாபனம் (Coastal corporation) எனப்படும் எண்ணெய்க் கம்பெனிக்கும் இலங்கை அரசுக்கும்இடையே உடன்பாடு ஏற்படும் நிலை காணப்படுகிறது. இதன் மூலம் 25 வருடகாலக் குத்தகை அடிப்படையில் இங்குள்ள வசதிகளை அமெரிக்கா பயன்படுத்த முடியும்.

இதன் மூலம் இவ்வுடன்படிக்கை அமுலுக்கு வந்து 5வருடங்களின் பின் ஆறு லட்சம் டாலர்களையும் 8 வருடங்களின் பின் 8.4 லட்சம் டாலர்களையும் இலங்கை அதன்மிகக்குறைந்த வருவாயாகப் பெறமுடியும். அமெரிக்கா இவ்வசதிகளை தனது சொந்த முடிவின்படி பாவிக்கவோ, குத்தகைக்கு விடவோ முடியும் என்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.

எனவே 1983 ம் ஆண்டில் நடைபெற்ற அணிசேரா மாநாடு இந்துமாகடலில் அமெரிக்காவின் தலையிடு பற்றி கருத்து வெளியிடுவதை இலங்கை எதிர்த்ததில் நாம் வியப்படையத் தேவையில்லை. மேலும் 1984 ல் கொழும்பில் நடைபெறவுள்ள இந்துமாக்கடல் பற்றிய மாநாட்டை அமெரிக்கா புறக்கணிக்கலாம் என்ற அச்சமும் இலங்கைக்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

---

சோவியத் எச்சரிக்கை

இந்துமாகடல் பகுதியில் அமெரிக்க இராணுவத் தளங்கள் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி இவ் விஷயத்தில் இலங்கை கவனமாக இருக்க வேண்டும். என எச்சரித்துள்ளது. திருகோணமலையில் கடற்படைக்கான வசதிகளைப் பெற அமெரிக்கா முயலகிறது. என்ற தகவலையிட்டு சோவியத் பெரிதும் கவனம் கொண்டிருப்பதாகவும், செய்தி அறிக்கைகள் மேலும் தெரிவிக்கின்றன: புதிய இராணுவ தளங்களை இம் பிராந்தியத்தில் அமைக்கும் முயற்சியில் அமெரிக்கா இப்பகுதி நாடுகளை பெருத்த மோசமான வற்புறுத்தலுக்கு உள்ளாக்குவதையும் இலங்கைக்கு சோவியத் சுட்டிக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

"ஐரோப்பியக் கதாநாயகர்களே!"

மேற்காணும் தலைப்புடன், 10 பக்கங்களிலமைந்த திரு. ராஜ் (சுகுணு) அவர்களால் ஆக்கப்பட்டு திரு. பாலா அவர்களால் 1-1-84 அன்று வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் பிரதிபலிக்கும் அடிப்படைக் கருத்தில் நாம் முரண்படாத போதும், இப் பிரசுரத்தின் ஆக்க முறையிலும், வெளியீட்டிலும் எமக்கு எந்தவித சம்பந்தமுமில்லை என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சி நமக்குக் கற்றுக் கொடுக்கும். திரளான மக்களுக்கும் கற்றுக்கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இன்று ஒரு போராடும் அரசியல் கட்சியின் முன் நிற்கும் கேள்வி இதுதான்; புரட்சிக்கு நாம் எதையாவது கற்றுக் கொடுக்க இயலுமா? புரட்சி மீது பாட்டாளி வர்க்க முத்திரை இடுவதற்கு, அல்லாமல் செயலில் புரட்சியை ஓர் உண்மையான, நிர்ணயமான வெற்றிக்கு இட்டுச் செல்வதற்கு சனநாயகப் போக்குள்ள முதலாளி வர்க்கத்தின் நிலைப்பாடின்மையும் அரை மனத்தன்மையும், துரோகத் தன்மையும் செயல் சக்தியற்றதாகச் செய்வதற்கு; நம் சமூக சனநாயகப் போதனையின் தவறின்மையும், முழுதும் புரட்சிகரமான ஒரே வர்க்கமாகத் திகழும் பாட்டாளி வர்க்கத்துடன் நமக்குள்ள பிணைப்பையும் நம்மால் பயன்படுத்திக்கொள்ள இயலுமா?

—லெனின்

• • •

கடந்த ஜூலை மாதத்தில் நடைபெற்ற இனக்கலவரத்தின்போது ஈரோஸ் இயக்கத்தினரால் சென்னையில் வெளியிடப்பட்ட சுவரொட்டி தற்போது பெர்லினில் அஞ்சலட்டையாக வெளியிடப்பட்டுள்ளது. இதன் பிரதிகளே பின் அட்டையில் அச்சிடப்பட்டுள்ளது. பிரதிகள் தேவையானோர் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

Mr. M. Kuhayoganathan,
ALTEN BRAKER STRASSE-7,
1000, BERLIN-44,
West Germany.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WE LONG FOR EELAM!

OUR COUNTRY BURNT.
OUR FACES DEFACED
OUR LIVES LOST
ONCE FOR ALL.
THE ONLY REALITY IS DEATH!
NOTHING REMAINS....
EXCEPT OUR HANDS!



-EELAM REVOLUTIONARY ORGANIZATION-

# ஈழம் எங்கள் தாகம்

எரிந்து போயிற்று எங்கள் நாடு..
அழிந்து போயின எங்கள் முகங்கள்..
எஞ்சியிருப்பவை எங்கள்
கரங்கள் மட்டுமே..
கரங்களுக்கு இப்போது
உதவிகள் தேவை!..



- ஈழப் புரட்சி அமைப்பு -
(EROS)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org